செ.வெ.எண்: 69 நாள்: 29.01.2020

**<u>தஞ்சாவூர் பெரிய கோயில் கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு அமைக்கப்பட்டுவரும் தற்காலிக பேருந்து நிலையம் மற்றும் வாகன நிறுத்துமிடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு</u>**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் பெரிய கோயில் கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு அமைக்கப்பட்டுவரும் தற்காலிக பேருந்து நிலையம் மற்றும் வாகன நிறுத்துமிடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் இன்று(29.01.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வருகின்ற 05.02.2020 அன்று நடைபெறவுள்ள தஞ்சாவூர் பெரிய கோயில் கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு தஞ்சாவூர் சீனிவாசபுரத்தில் பக்தர்கள் வசதிக்காக அமைக்கப்பட்டுவரும் தற்காலிக வாகன நிறுத்துமிடத்தை ஆய்வுசெய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அங்கு செய்யப்பட்டு வரும் தற்காலிக கழிப்பறை வசதி, குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் சிரமமின்றி நடந்துசெல்லும் வகையில் பாதைகள் அமைக்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தற்காலிக வாகன நிறுத்துமிடத்தில் பக்தர்களுக்கான சிறப்பு பேருந்து வந்து செல்லும் இடம், முதலுதவி மையம், பொது உதவி மையம் ஆகியவை அமைக்கப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

தொடர்ந்து, பட்டுக்கோட்டை புறவழிச்சாலை புதுப்பட்டினத்தில் அமைக்கப்பட்டுவரும் தற்காலிக பேருந்து நிலையத்தை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், வெளியூரிலிருந்து பேருந்துகளில் வரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை தற்காலிக பேருந்து நிலையத்தில் செய்திடுமாறு தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தினார்.

முன்னதாக, தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரையில் பெரிய கோயில் கும்பாபிஷேகத்திற்கான புனித நீரை எடுக்கும் இடத்தினை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அவ்விடத்தில் முட்புதர்களை அகற்றி சுத்தமாக வைத்திட தொடர்புடைய துறையினரை அறிவுறுத்தினார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.